

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புதிய வருமான வரி சட்ட மசோதாவின் உட்பிரிவுகளை ஆராய்வதற்காக 31 உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழை வடசென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

## ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல்

# அன்னைத் தமிழைக் காக்க உறுதியேற்போம்!

### உலகத் தாய்மொழி நாளில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவு!

**சென்னை, பிப்.23-**

**உலகத் தாய்மொழி நாளையொட்டி, கழக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி விடுத்த வலைதளப் பதிவில், "ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னைத் தமிழைக் காக்க உறுதியேற்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வலைதளப் பதிவு வருமாறு:

வாழ்க நிரந்தரம் - வாழ்க தமிழ் மொழி - வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழிய வே!



ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி! என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று சுடர்க தமிழ்நா டே!

உயிராக, வாழ்வியல் நெறியாக, அறமாக, சினமாக, சிந்தனை மொழியாக, அறிவியல் வழியாக, தமிழரின் தனிப்பெரும் உணர்வாக, உலக மொழிக்கெல்லாம் ஒளிதரும் செம்மொழியாக உதிரத்தில் கலந்துவிட்ட தாய்த் தமிழை போற்றி வணங்கிடுவோம்.

ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னைத்தமிழைக் காக்க உறுதியேற்போம்! தமிழ் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

## குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சர்ச்சைப் பேச்சு!

# 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!'

### கனிமொழி கருணாநிதி எம்.பி. 'எக்ஸ்' தளத்தில் பதிவு!

**சென்னை, பிப்.23–**

**குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சர்ச்சைப் பேச்சுக்கு, 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!' எனத் தனது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பதிவிட்டுள்ளார்.**




சமீபத்தில் நடந்த 98-வது அகில பாரதிய மராத்தி சாகித்ய சம்மேளம் நிகழ்ச்சியில் பங்கேற்று ஜெகதீப் தன்கர் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், "ஒரு நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் மொழியை அழிப்பதே சிறந்த வழி", நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்குள் படையெடுத்தவர்கள் இதைத்தான் செய்தார்கள் என ஜெகதீப் தன்கர் பேசியுள்ளார்.

இந்த நிலையில், குடியரசுத் துணைத்தலைவர் ஜகதீப் தன்கர் சர்ச்சை பேச்சுக்கு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!' எனச் சாடியுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | மாவட்ட கழக அலுவலகம், திருக்கோயிலூர் சாலை, திருவண்ணாமலை. |
| 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | என்.கே.பி. பார்ட்டி ஹால், போளூர் புறவழிச் சாலை, ஆரணி. |
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21-02-2025




## இந்தித் திணிப்பை எதிர்த்து

# நெல்லை மாநகரத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்!

### மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

நெல்லை.பிப்.23.

நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் பள்ளிக்கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவோம் என்று மிரட்டி,நம் மாநிலத்திற்கு தர வேண்டிய நிதியை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கிறது.'இந்தித் திணிப்பை ஒரு போதும் ஏற்க மாட்டோம்' என்று கழகத்தலைவர் அவர்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். இந்தி திணிப்பை ஒன்றிய அரசு மேற்கொள்ளும் போதெல்லாம் தமிழ்நாடு ஒன்றிணைந்து எதிர்த்து வந்திருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, நமது தன்னிகரில்லா தலைவர் முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர்களின் எழுச்சி நாயகன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி

தற்போதைய இந்தித் திணிப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கூறி நெல்லை மாநகர மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்து வகையிலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் திருநெல்வேலி மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு மற்றும் திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ ஆகியோர் அறிவுறுத்தலின் படி நெல்லை மாநகர தி.மு.க சார்பில் ஆட்டோ விளம்பரங்கள்,வீடுகளின் முன்பு கோலமிடுதல் பேருந்து நிறுத்தங்கள் முன்பு பதாகைகள் வைத்தல், துண்டறிக்கைக்கைகள் அச்சடித்து வீடு வீடாக வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நெல்லை மாநகர தி.மு.க சார்பில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.தற்போது நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தின் முன்பு இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்ற வாசகத்தை கோலமிட்டு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை நகர், மன்னர் மேல்நிலைப்பள்ளியில், நேற்று முன்தினம் (21.02.2025) சிவகங்கை மாவட்ட நிர்வாகம், பள்ளிக் கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் மற்றும் பபாசி இணைந்து நடத்தும், 4வது புத்தகத் திருவிழாவினை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை) மற்றும் எஸ்.மாங்குடி (காரைக்குடி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ரமேஷ், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்ற துணைத்தலைவர் கார்கண்ணன், தென்னந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க செயலாளர் எஸ்.கே.முருகன் உட்பட பலர் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்துறையின் மூலம் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சியில் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கர்ப்பிணி பெண்களுக்கு சீதனப்பொருட்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கோவிந்தராஜ், சண்முகநாதன், பூபதி மணி, அண்ணாமலை, சாயல்குடி ஜெயபாலன் மற்றும் கட்சி நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.